# சர்வதேச நீதி கோரி கிளிநொச்சியில் உறவுகள் தீச்சட்டி ஏந்திப் போராட்டம்

கிளிநொச்சி, பெப். 20

சர்வதேச நீதி கோரி வலிந்து காணாமல் ஆக் கப்பட்டோரின் உறவினர்களால் கிளிநொச்சியில் இன்று மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சியில் கடந்த 2017 ஆம் ஆண்டு இதே நாளில் ஆரம்பிக்கப்பட்ட வலிந்து காணாமல் ஆக் கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் இன்று எட் டாவது வருடத்தை நிறைவு செய்த நிலையில், வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் மாபெரும் தீச்சட்டி ஏந்திய பேரணி நடைபெற்றது.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட தீச்சட்டி ஏந்திய பேரணி டிப்போ சந்தி வரை சென்றது. இதில் வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

இந்தப் போராட்டம் தொடர்பில் வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கம் 2▶




மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 08 வியாழக்கிழமை 20.02.2025 கதிர் 133

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel



## 10 இந்திய மீனவர்கள் வடக்கு கடலில் கைது!

யாழ்ப்பாணம், பெப். 20

வடக்கு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 10 இந்திய மீனவர்கள் நேற்று புதன்கிழமை இரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மற்றும் நெடுந்தீவுக் கடற்பரப்பினுள் 3 படகுகளில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளை கடல் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர், அவர்களைக் கைது செய்துள்ளதுடன் மூன்று படகுகளையும் கைப்பற்றியுள்ளனர்.

மன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட நான்கு மீனவர்களையும், அவர்களின் ஒரு படை-கயும் தலைமன்னார் துறைமுகத்துக்குக் கொண்டு சென்ற கடற்படையினர், அவர்களை மன்னார் கடற்றொழில் நீரியல் வளத்துறையினர் ஊடாக மன்னர் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதேவேளை, நெடுந்தீவுக் கடற்பரப்பில் 2 படகுகளுடன் கைது செய்யப்பட்ட 6 மீ- 2▶

# தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை

## நாடாளுமன்றில் அரசு இன்று தெரிவிப்பு

கொழும்பு, பெப். 20

நாட்டில் தேசிய பாதுகாப்புக்கு அச்சு றுத்தல் எதுவும் இல்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

கொழும்பு - புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபர் மஹரகம, தம்பஹேன வீதியைச் சேர்ந்த சமிந்து டில்ஷான் பியுமங்க கந்தானராச்சி என அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும் அவர் கூறினார். 2▶



## மீண்டும் எம்.பியாகின்றார் ரணில்?



கொழும்பு, பெப். 20

புதிய ஜனநாயக முன்னணியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்த ஆண்டு இறுதிக்குள் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்கவுள்ளார் என்று நம்பகமான அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கட்சியின் தேசியப் பட்டியலில் இருந்து நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர், ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் இராஜிநாமா செய்வார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, எதிர்க்கட்சியைச் சேர்ந்த பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் விக்கிரமசிங்கவுடன் கைகோர்க்கத் திட்டமிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. 2▶

## கனேமுல்ல சஞ்சீவவின் சடலத்தைப் பெற இதுவரை எவரும் முன்வரவில்லையாம்

கொழும்பு, செப். 20

நீதிமன்ற வளாகத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட பாதாள உலகத் தலைவர் கனேமுல்ல சஞ்சீவ இறந்து ஒரு நாளாகியும் அவரது சடலத்தைப் பெற்றுக்கொள்ள இதுவரை யாரும் முன்வரவில்லை என்று வாழைத் தோட்டம் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மினுவங்கொடையைச் சேர்ந்த கனேமுல்ல சஞ்சீவவின் சகோதரி முன்வந்த போதிலும், அவரது குடும்பப் பெயரில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக சடலம் அவரிடம் ஒப்படைக்கப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கனேமுல்ல சஞ்சீவவின் மனைவி இருந்தும் அவர் சடலத்தைப் பெற்றுக்கொள்ள இன்னும் முன்வரவில்லை என்றும், சடலம் தற்போது பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். 2▶

## வன்முறைக் கும்பல் தாக்கி ஓய்வுபெற்ற அதிபர் மரணம்

யாழ்ப்பாணம், பெப். 20



யாழ்ப்பாணத்தில் மது போதையில் நின்ற வன்முறைக் கும்பலின் தாக்குதலுக்கு இலக்கான முன்னாள் அதிபர் சிகிச்சை பலனின்றி உயி ரிழந்துள்ளார்.

முன்னாள் அதிபரான விசுவாசம் என்பவரே உயிரிழந்துள்ளார். 2▶

## முகமாலை கடை ஒன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்

பளை, பெப். 20

முகமாலை வடக்கு, ஏ - 9 வீதியோரமாக அமைந்துள்ள கடை ஒன்றின் மீது இனந்தெரியாத நபர்களால் நேற்று புதன்கிழமை நள்ளிரவு பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்தக் கடையின் மீது 2020 ஆம் ஆண்டில் கழிவு எண்ணை வீசப்பட்டதுடன் 2021ஆம் ஆண்டில் மூகமூடி அணிந்த மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு நபர்களால் இரும்புக் கம்பிக் கொண்டு கடையின் சொத்துக்கள் அடித்து உடைக்கப்பட்டதுடன் சந்தேகநபர்களும் தப்பிச் சென்றிருந்தனர்.

இந்நிலையில், நேற்று இரவு மூன்றாவது தடவையாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் பளை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சர்வதேச நீதி கோரி……

வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை எம்மிடம் ஒப்படையுங்கள் எனக் கோரியும் அல்லது அவர்கள் எங்கே என சிங்கள பேரினவாத அரசிடம் பலமுறை கேட்டும் அதற்கான தீர்வு கிடைக்கவில்லை. எனவே, நாம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி கோரி 2017 பெப்ரவரி 20 ஆம் திகதி கிளிநெச்சி கந்தசுவாமி ஆலய முன்பாக ஆரம்பிக்கப்பட்ட தொடர் போராட்டமானது வடக்கு, கிழக்கு என விரிவுபடுத்தப்பட்டது.

2017 பெப்பரவரி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் எட்டு வருடங்களாக அதாவது இன்றுடன் 2920 நாட்களாக கடந்து தொடர்கின்றது. 2009 மே 18 இல் முள்ளிவாய்க்காலில் போர் மௌனிக்கப்பட்டு 16 ஆண்டுகள் ஆகின்றன.

இன்றும் இனப்படுகொலை தொடர்ந்த வண்ணம் உள்ளன. ஆனால், இலங்கையில் ஜனாதிபதிகளும் ஆட்சியாளர்களும் மாறினாலும் தொடர்ந்தும் இனப்படுகொலைக்கான நீதி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி, நேரடியாக படையினர்களிடம் சாட்சியங்களுடன் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பான நீதி இதுவரை கிடைக்கவில்லை.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கத்தினராகிய நாம் 2017 தொடக்கம் இன்று வரையும் உள்நாட்டில் பல போராட்டங்களை நடத்தினோம். இலங்கை அரசின் நீதித்துறையில் நம்பிக்கையில்லை என்ற ஒரு காரணத்தினால் நாம் சர்வதேச நீதி விசாரணை வேண்டும் எனப் பல தடவைகள் கோரிக்கைகளை முன்வைத்து போராடி வருகின்றோம்.

சர்வதேச நாடுகளின் இராஜதந்திரிகளுக்கு மகஜர்களையும் அனுப்பினோம். நேரடியாக ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் நேரடியாகச் சென்று ஆவணங்களை ஆதாரத்துடன் கையளித்தோம். ஆனால், இதுவரை எமக்கான நீதி கிடைக்கவில்லை.

2015 ஆட்சியில் இருந்த நல்லாட்சிக் காலம் எனச் சொல்லப்படும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 2019 ல் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ,2022 இல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரையான சகல அரசுகளும் எம்மை ஏமாற்றியுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தி மூலம் தற்போதய புதிய ஜனாதிபதியாக கடந்த 2024 செப்டெம்பர் பதவியேற்ற அநுரகுமார திஸாநாயக்க 2024 நவம்பர் 159 நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்று அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்து மூன்று மாதங்கள்





கடந்த நிலையிலும் எந்தவொரு நல்லெண்ணமும் அவர்களின் செயலில் தென்படவில்லை. மாறாக புலனாய்வாளர்களை ஏவி விட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் தாய்மாரைக் கண்காணிப்பதுடன் அவர்களைச் சுதந்திரமாக தமது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கேட்டு நடத்தும் கவனயீர்ப்புப் போராட்டங்களில் கலந்து கொள்ள விடாமல் நீதிமன்ற தடை உத்தரவுகளைக் கொடுத்து ஜனநாயக வழிப் போராட்டத்தை அடக்கி ஒடுக்கி தடுக்கும் அடாவடிச் செயல்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை. ஜனாதிபதிகளின் பெயர்கள் மாறியுள்ளன செயல்கள் மாறவில்லை. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுடைய பெற்றோர்கள் இதுவரை 300 இற்கும் மேற்பட்ட தமது உறவுகளின் உண்மை நிலையறியாது வேதனையுடன் உயிர் இழந்த பரிதாபங்கள் வடக்கு, கிழக்கில் நடந்துள்ளன. எங்கள் வேதனைகளையும் வலிகளையும் உண்மைகளையும் இலங்கை அரசு புரியவில்லை. அதேபோல் சர்வதேசமும் புரியவில்லை என்பதையே கடந்த எட்டு வருங்களாக நாங்கள் கண்ட உண்மை.

அரசுகள் மாறும் போது எல்லா சர்வதேச இராஜதந்திரிகளும் நாடுகளின் தலைவர்களும் ஏன் ஐக்கிய நாடுகள் சபைகளும் கூட இலங்கை அரசைக் காப்பாற்றும் ஒரு செயலாக கால அவகாசங்களை வழங்கி கால நீடிப்பைச் செய்து வருவதை நாம் எட்டு வருடங்களாக அவதானித்து வந்துள்ளோம் என்ற உண்மையைக் கவலையுடனும் கண்ணீருடனும் மனவேதனையடனும் இந்த எட்டு ஆண்டு நிறைவில் பதிவு செய்கின்றோம். எனவே, இந்த உண்மைகளை உணர்ந்து இனியும் எம்மை ஏமாற்றாமல் எங்கள் உணர்வுகளை மதித்து சர்வதேச நீதி கிடைக்க ஆவன செய்யுமாறு சர்வதேசத்திடம் வேண்டுகின்றோம்.” - என்றுள்ளது

## 10 இந்திய மீனவர்கள் …….

னவர்களையும் காங்கேசன்துறை துறைமுகத்துக்குக் கொண்டு சென்ற கடற்படையினர், அவர்களை யாழ்ப்பாணம் நீரியல் வளத்துறையினர் ஊடாக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளனர்.

அதேவேளை, இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த 50 நாட்களில் 99 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 13 படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் எம்.பியாகின்றார் …….

பல்வேறு கட்சிகள் ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்கவை நாடாளுமன்றத்துக்கு வருமாறு முன்மொழிந்துள்ளன.

ரணில் விக்கிரமசிங்க சமீபத்தில் காலிப் பகுதிக்கு விஜயம் செய்தபோது, மக்கள் அவரை நாடாளுமன்றத்துக்கு வந்து பொதுச் சேவையில் சேருமாறு கேட்டுக்கொண்டனர். இந்தச் சந்தர்ப்பத்தில், ரணில், ”கொஞ்சம் பொறுமையாக இருங்கள்” என்று கூறியிருந்தார்.

## கனேமுல்ல சஞ்சீவவின்…….

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைத் தோட்டம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தேசிய பாதுகாப்புக்கு…….

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

மேலும், சந்தேகத்துக்குரிய மற்றைய பெண் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அல்லது தடைகள் எதுவும் இல்லை என்றும், நீண்டகாலமாக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களுக்கு இடையில் இந்த நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.



# மன்னார் மக்களின் வாழ்வியலை பாதிக்கின்ற செயற்பாடுகளுக்கு இடமளிக்கமாட்டோம்– ஜெகதீஸ்வரன் எம்.பி!

மன்னார் மாவட்ட மக்களுடைய நலன் சார்ந்த, வாழ்வியலை, பொருளாதாரத்தை பாதிக்கின்ற செயற்பாடுகளுக்கு இடமளிக்கமாட்டோம் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் பகுதியில் நேற்றைய தினம் கனிய மணல் ஆய்வு இடம்பெற வருகை தந்த குழு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் கனிய மணல் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக குறித்த ஒரு நிறுவனம் ஆய் வினை மேற்கொள்ள வந்ததாக தகவல் கிடைத்திருந்தது.

இது தொடர்பாக உடனடியாக குறித்த அமைச்சுக்களுக்கு தெரியப்படுத்தியதுடன், சபை முதல்வர் விமல் ரத்நாயக்கா அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வந்து உடனடியாக அந்த செயற்பாட்டை நிறுவதற்குரிய பணிப்புரை விடுத்திருந்தோம்.

மன்னார் மாவட்ட செயலாளரிடம் இது தொடர்பான பணிப்புரை விடுக்கப்பட்டது.

அந்தவகையில் மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவர் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவும் கவனம் செலுத்தியுள்ளார்.

அவரும் இச் செயற்பாட்டை உடன் நிறுத்துமாறு பணிப்புரை பிறப்பித்திருந்தார்.

நாங்கள் எமது அரசாங்கத்தில் மன்னார் மாவட்ட மக்களுடைய நலன் சார்ந்த வாழ்வியலை, பொருளாதாரத்தை பாதிக்கின்ற செயற்பாடுகளுக்கு எந்த விதத்திலும் இடமளிக்கமாட்டோம்.



கடந்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் இதனை நிறுத்துவதற்கான தீர்மானத்தை எடுத்திருந்தோம். அதற்கமைய இதனை தடுத்துள்ளோம்.

எதிர்காலத்திலும் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாத வண்ணம் எமது அரசாங்கம் செயற்படும். கடந்த கால அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அனுமதிகள் தொடர்பாகவும் மீளாய்வு செய்யப்படும்.

இது தொடர்பில் மக்கள் பயம் கொள்ள தேவையில்லை. இது மக்களுக்கான அரசாங்கம். மக்களுக்காகவே செயற்படும் எனத் தெரிவித்தார்.

# நாட்டின் பாதுகாப்பு ஆபத்தில் உள்ளது– தயாசிறி ஜயசேகர!

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏதாவது நடந்தால் சபாநாயகர் தான் பொறுப்பேற்க வேண்டும் என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இன்று இடம்பெற்ற நாடாளுமன்ற விவாதத்தில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏதாவது நடந்தால், சபாநாயகர் தான் பொறுப்பேற்க வேண்டும். “நாட்டின் பாதுகாப்பு ஆபத்தில் உள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாவலர் சபாநாயகர். எனவே நாடாளுமன்ற உறுப்பினர்களின் உயிருக்கு ஏதாவது நடந்தாலோ அல்லது அவர்கள் கொலை செய்யப்பட்டாலோ அவர் பொறுப்பேற்க வேண்டும்.

எங்களுக்கு பாதுகாப்பு தேவையில்லை. ஆனால் எந்த துப்பாக்கிச் சூட்டையும் எதிர்கொள்ள நாங்கள் தயாராக இல்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பயனுள்ள சேவைகளை வழங்க அரசு நிறுவனங்களில் சிறப்பு பிரிவு!

மிகவும் பயனுள்ள பொது சேவைகளை வழங்குவதற்காக அனைத்து அரசு நிறுவனங்களிலும் உள் விவகாரப் பிரிவை நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கையை ஜனாதிபதியின் செயலாளர் என்.எஸ். குமநாயக்க வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த பிரிவை நிறுவுவதற்கான முதன்மை நோக்கமாக, ஊழலைத் தடுப்பதும், அரசு நிறுவனத்திற்குள் ஒருமைப்பாட்டின் கலாச்சாரத்தை வளர்ப்பதும், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதும், நெறிமுறை நிர்வாகத்தை ஊக்குவிப்பதும், லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையத்துடன் இணைந்து சட்ட அமுலாக்கத்தில் உதவுவதும் ஆகும்.

அனைத்து அரசு நிறுவனங்களிலும் உள்ளக விவகாரப் பிரிவு ஒரு சிறப்புப் பிரிவாக நிறுவப்பட வேண்டும் என்றும், ஆரம்ப கட்டமாக, அனைத்து அமைச்சரவை அமைச்சுகள், மாகாண தலைமைச் செயலாளர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்களிலும் இது நிறுவப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்த உள்விவகாரப் பிரிவுகளை நிறுவுவது தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளர், அமைச்சுச் செயலாளர்கள், மாகாண தலைமைச் செயலாளர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்களுக்கு எழுத்துப்பூர்வ அறிவிப்பையும் வெளியிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.




# இலங்கை நிர்வாக சேவைகள் சங்கம் ஜனாதிபதிக்கு கடிதம்!

இலங்கை நிர்வாக சேவைகள் சங்கம் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்த கடிதத்தில், வரையறுக்கப்பட்ட நிதியில் அரச வருமானத்தை வலுப்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமான வரவு செலவு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், நிலையான நிதி நிலைமையை எட்டுவதற்கு அரசாங்கத்திற்கு தமது தொழிற்சங்கம் அதிகபட்ச ஆதரவை வழங்கும் எனவும் இலங்கை நிர்வாக சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும், இவ்வருட வரவு செலவுத் திட்டத்தின் மூலம் குறைந்த சம்பளத்தைப் பெற்ற அரச ஊழியர்களுக்கு நீதி கிடைக்க சிறந்த முயற்சியை மேற்கொண்டுள்ளமை பாராட்டத்தக்கது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நாட்டின் பாதுகாப்பு குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்

## சஜித் பிரேமதாச!



நீதிமன்ற வளாகத்தினுள் நடந்த கொலை, நீதிமன்றத்தை மட்டுமன்றி ஒட்டுமொத்த சமூகத்தையும் பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளியுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

நீதித்துறையில் பெரும் பணிகளை ஆற்றிவரும் நீதிபதிகளுக்கு குறிப்பிட்ட பாதுகாப்பு வழங்கப்பட்டாலும், அண்மைய காலங்களில் அவர்களின் பாதுகாப்பை நீக்குவதாக அவர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த சஜித் பிரேமதாச மேலும் தெரிவிக்கையில்,

சிவில் குடிமக்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் கூட இன்று பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஊடகவியலாளரான சம்முதிதவுக்கு நீதிமன்ற உத்தரவின் பேரில் பாதுகாப்பு வழங்கப்பட்டது. ஆனால் இன்று அந்த பாதுகாப்பு அவரிடமிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

எனவே மக்களினதும், ஊடகத்துறையில் பணியாற்றுபவர்களினதும் பாதுகாப்பு குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். கனம் நீதவான் நீதிமன்றத்தினுள் நடந்த இந்த சம்பவம் குறித்து விசேட விசாரணையை நடத்தி உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அவ்வாறே மக்கள் பிரதிநிதிகளினது பாதுகாப்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

# அமெரிக்காவின் நாடு கடத்தல்

## பனாமாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர் உட்பட சுமார் 300 பேர்!



அமெரிக்காவில் இருந்து நாடு கடத்தப்பட்ட இலங்கையர்கள் உட்பட பல்வேறு நாடுகளைச் சுமார் 300 சட்டவிரோத குடியேறிகள் தற்போது பனாமா ஹோட்டலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் ஆவணமற்ற வெளிநாட்டினருக்கு எதிரான பாரிய அடக்குமுறையின் ஒரு பகுதியாக இவர்கள் பனாமாவின் தலைநகரில் அமைந்துள்ள Decápolis என்ற சொகுசு ஹோட்டலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச அதிகாரிகளால் ஒருங்கிணைக்கப்பட்ட நடவடிக்கையில் தங்கள் சொந்த நாடுகளுக்குத் திரும்புவதற்கான ஏற்பாடுகளுக்காகக் காத்திருக்கும் போது, இந்த நபர்கள் ஹோட்டலை விட்டு வெளியேற அனுமதிக்கப்படவில்லை என்றும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த சட்டவிரோத குடியேற்றவாசிகள் தொடர்பில் சமூக ஊடகங்களில் பரவி வரும் படங்கள் மற்றும் வீடியோக்களில்,

ஹோட்டலின் ஜன்னல்களில், 'தயவுசெய்து எங்களுக்கு உதவுங்கள்' மற்றும் 'நாங்கள் பாதுகாப்பாக இல்லை' என்று நாடுகடத்தப்பட்டவர்கள் வாசனங்களை எழுதி வெளிப்படுத்தியுள்ளனர்.

அதே நேரத்தில் பொலிஸ் அதிகாரிகள் ஹோட்டல் வளாகத்தில் பாதுகாப்பில் இருப்பதனையும் காண முடிகின்றது.

அசோசியேட்டட் பிரஸ் செய்திச் சேவையின் அறிக்கையின்படி, நாடு கடத்தப்பட்ட சுமார் 300 பேரில் பெரும்பாலானோர் இந்தியா, நேபாளம், இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், சீனா, வியட்நாம் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இவர்கள் நாடுகடத்தப்படுவதில் அமெரிக்கா சிரமங்களை எதிர்கொள்வதால் பனாமா ஒரு தடுப்பு நிலையமாக பயன்படுத்தப்படுகிறது.

எவ்வாறெனினும், இதற்கு பதிலளித்துள்ள பனாமாவின் பாதுகாப்பு அமைச்சர் பிராங்க் அப்ரேகோ, புலம்பெயர்ந்தோரின் சுதந்திரம் பறிக்கப்படவில்லை என்றும் அவர்கள் அவர்களின் பாதுகாப்பிற்காக எங்கள் காவலில் உள்ளனர் என்றும் கூறினார்.

பனாமாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான குடியேற்ற ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக நாடு கடத்தப்பட்டவர்கள் மருத்துவ உதவி மற்றும் உணவைப் பெற்று வருவதாகவும் செய்தியாளர்களிடம் பேசிய அப்ரிகோ உறுதிப்படுத்தினார்.

இந்த மாத தொடக்கத்தில் அமெரிக்க வெளியுறவுத் துறை செயலர் மார்கோ ரூபியோ பனாமாவிற்கு விஜயம் செய்ததைத் தொடர்ந்து, மத்திய அமெரிக்க நாடு, நாடு கடத்தப்பட்டவர்களுக்கு 'பாலம்' அல்லது போக்குவரத்து நாடாக சேவை செய்ய ஒப்புக்கொண்டது.

அதேநேரத்தில், வொஷிங்டன் இதற்கான அனைத்து செலவுகளையும் ஏற்கிறது.

## உக்ரேன் ஜனாதிபதி சர்வாதிகாரி என சாடிய ட்ரம்ப்!



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று உக்ரேனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியை ஒரு 'சர்வாதிகாரி' என்று கண்டனம் செய்தார்.

மேலும் அவர் அமைதியைப் பாதுகாக்க விரைவாக செயற்பட வேண்டும் என்றும், அவ்வாறு இல்லாவிடின் ஜெலென்ஸ்கி தனது நாட்டை இழக்கும் அபாயத்தை எதிர்கொள்ளக் கூடும் என்றும் எச்சரித்தார்.

ட்ரம்பின் இந்த கருத்தானது இரு தலைவர்களுக்கிடையிலான பகையை ஆழப்படுத்தியதுடன் ஐரோப்பிய அதிகாரிகளையும் எச்சரித்தது.

ரஷ்யாவின் 2022 படையெடுப்பிற்கு உக்ரேன் தான் காரணம் என்று ட்ரம்ப் கூறிய ஒரு நாளுக்குப் பின்னர் ரஷ்யா-உக்ரேன் மோதலை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ட்ரம்பின் அணுகுமுறை மொஸ்கோவிற்கு பயனளிக்கும் என்று ஐரோப்பாவில் உள்ள அமெரிக்க நட்பு நாடுகளிடையே கவலைகளை அதிகரித்தது.

அவர் ஜனாதிபதியாக ஒரு மாதத்திற்குள், போரில் ரஷ்யாவை தனிமைப்படுத்தும் பிரச்சாரத்தை புட்டினுடனான தொலைபேசி அழைப்பு, சவுதி அரேபியாவில் உக்ரேனை ஓரங்கட்டிய மூத்த அமெரிக்க மற்றும் ரஷ்ய அதிகாரிகளுக்கு இடையேயான பேச்சுக்கள் மூலம் முடிவுக்கு கொண்டுவந்தார்.

இந்த நிலையில், நேற்று சமூக ஊடகங்களில் பதிவிட்ட ட்ரம்ப் ஜெலென்ஸ்கியை தேர்தல்கள் இல்லாத ஒரு சர்வாதிகாரி என்றும் சாடினார்.

இதற்குப் பதிலளித்த உக்ரேன் வெளிவிவகார அமைச்சர் Andrii Sybiha, தனது நாட்டை விட்டுக்கொடுக்க யாரும் கட்டாயப்படுத்த முடியாது என்றார்.

ஜெலென்ஸ்கியின் ஐந்தாண்டு பதவிக்காலம் 2024 இல் முடிவடைய வேண்டும், ஆனால் ரஷ்யாவின் படையெடுப்பிற்கு பதிலளிக்கும் வகையில் உக்ரேன் 2022 பெப்ரவரியில் விதித்த இராணுவச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி, நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்த முடியாது.

சவுதி அரேபியாவில் நடந்த அமெரிக்க - ரஷ்யா பேச்சுவார்த்தையில் கெய்வ் விலக்கப்பட்டதற்கு பதிலளித்த ஜெலென்ஸ்கி செவ்வாயன்று, அமெரிக்க ஜனாதிபதி மொஸ்கோவால் நிர்வகிக்கப்படுவதாக சாடிப் பேசினார்.

இதற்கு பதிலளிக்கும் விதமாகவே ட்ரம்பின் இந்தக் கருத்துக்கள் வந்துள்ளன.

இதனிடையே, அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ் நேற்று ட்ரம்பை தாக்குவதற்கு எதிராக ஜெலென்ஸ்கிக்கு எச்சரிக்கை விடுத்தார்.

கடந்த ஜனவரி 20 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதியாக மீண்டும் பதவியேற்ற ட்ரம்ப், உக்ரேன் போரை விரைவில் முடிவுக்கு கொண்டுவருவதாக பலமுறை சபதம் செய்தார்.

அவர் புட்ன் மற்றும் ஜெலென்ஸ்கிக்கு நேற்று தனித்தனியாக தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டு உரையாடினார்.

இதனிடையே தற்சமயம் ரஷ்யா உக்ரேனின் ஐந்தில் ஒரு பகுதியைக் கட்டுப்படுத்துகிறது, மேலும் பல மாதங்களாக கிழக்கில் மெதுவாக முன்னேறி வருகிறது.

அதே நேரத்தில் உக்ரேனின் சிறிய இராணுவம் மனிதவள பற்றாக்குறையுடன் போராடுகிறது, மேலும் மேற்கு ரஷ்யாவில் ஒரு பகுதியை வைத்திருக்க முயற்சிக்கிறது.

இந்த நிலையில், எந்தவொரு சமாதான ஒப்பந்தத்தின் கீழும் உக்ரேனின் பிரதேசத்தை விட்டுக்கொடுக்கவும் நிரந்தரமாக நடுநிலை வகிக்கவும் ரஷ்யா கோரியுள்ளது.

கைப்பற்றப்பட்ட நிலத்தில் இருந்து ரஷ்யா வெளியேற வேண்டும் என்று உக்ரேன் கோருகிறது, மேலும் மாஸ்கோவின் தாக்குதலைத் தடுக்க நேட்டோ உறுப்பினர் அல்லது அதற்கு சமமான பாதுகாப்பு உத்தரவாதத்தை விரும்புகிறது.

போர் தொடங்கியதில் இருந்து அமெரிக்காவும் ஐரோப்பாவும் உக்ரேனுக்கு பல பில்லியன் டொலர்களை இராணுவ உதவியாக வழங்கியுள்ளன.




## இந்தியாவில் டெஸ்லா தொழிற்சாலை அமைப்பது மிகவும் நியாயமற்றது

### டிரம்ப் தெரிவிப்பு

இந்தியாவில் நுழைய மின்சார கார் உற்பத்தி நிறுவனமான டெஸ்லா சமீப காலமாக ஆர்வம் காட்டி வருகிறது. ஆனால் வரி விகிதம் காரணமாக டெஸ்லா பின்வாங்கியது. சமீபத்தில் கார்கள் மீதான சுங்கவரியை 110 சதவீதத்தில் இருந்து 70 சதவீதமாக மத்திய அரசு குறைத்தது. மேலும் குறைந்த பட்சம் 500 மில்லியன் அமெரிக்க டாலருக்கு மேல் இந்தியாவில் முதலீடு மற்றும் தொழிற்சாலை அமைக்கும் மின்சார வாகன நிறுவனங்களுக்கு இறக்குமதி வரியை 15 சதவீதம் வரை குறைக்கப்படும் என இந்திய அரசு தெரிவித்திருந்தது.

இதற்கிடையில் 2 நாள் பயணமாக அதிபர் டிரம்பின் அழைப்பின் பேரில் பிரதமர் மோடி கடந்த வாரம் அமெரிக்கா சென்றிருந்தார். அப்போது பிரதமர் மோடி எக்ஸ், ஸ்பேஸ் எக்ஸ், டெஸ்லா நிறுவனத்தின் உரிமையாளரான எலான் மஸ்க்கை சந்தித்து பேசினார்.

இந்நிலையில் இந்தியாவில் 13 வகையான பணிகளுக்கு ஆட்களை தேர்வு செய்வதற்கான அறிவிப்பை டெஸ்லா நிறுவனம் 'லிங்க்ட் இன்' தளத்தில் வெளியிட்டுள்ளது. அதில் ஐந்து வகையான பணிகளுக்கு தேர்வு செய்யப்படுபவர்கள் டெல்லி மற்றும் மும்பையிலும், எஞ்சிய பணிகளுக்கு தேர்வு செய்யப்படுபவர்கள் மும்பையில் பணியாற்ற வேண்டும் என அந்த விளம்பரத்தில் கூறப்பட்டு உள்ளது.

இதன்மூலம் டெஸ்லா நிறுவனம் விரைவில் இந்தியாவில் வர்த்தகத்தை தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் டெஸ்லா அமெரிக்காவின் வரி விதிப்பை தவிர்க்க இந்தியாவில் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் இருந்தால் அது மிகவும் நியாயமற்றது என டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக டொனால்டு டிரம்ப் கூறுகையில் 'மின்சார வாகனம் தயாரிக்கும் டெஸ்லா, அமெரிக்காவின் வரி விதிப்பை தவிர்ப்பதற்காக இந்தியாவில் தொழிற்சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறு திட்டம் இருந்தால் அது மிகவும் நியாயமற்றது' எனத் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் அமெரிக்க பயணத்தின்போது, கார்கள் மீதான இந்தியாவின் அதிக வரி தொடர்பாக வலியுறுத்தியதை நினைவு கூர்ந்த டொனால்டு டிரம்ப், விரைவில் முன்னதாக உள்ள வர்த்தக ஒப்பந்தத்தை நோக்கிச் செயல்படவும், வரிகள் தொடர்பான மோதலைத் தீர்க்கவும் ஒப்புக்கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

## அமெரிக்காவில் பறவை காய்ச்சல் முட்டை விலை அதிகரிப்பு

அமெரிக்காவில் பறவை காய்ச்சல் பரவத் தொடங்கியுள்ளதால் கோழி முட்டைகளுக்கான டிமாண்ட் அதிகரித்து, அவற்றின் விலையும் உயர்ந்துள்ளது.

முட்டைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக, ஒரு நபருக்கு குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேல் முட்டைகளை விற்க கடை உரிமையாளர்கள் தயக்கம் காட்டுகின்றனர். அமெரிக்காவில் கடந்த 3 ஆண்டுகளில் பறவை காய்ச்சல் பாதிப்பால் 16 கோடி பறவைகள் இறந்துள்ளன.



# கனேமுல்ல சஞ்சீவ கொல்லப்பட்ட சம்பவம்- வெளியான தகவல்!



புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் உள்ள 5 ஆம் இலக்க நீதிமன்றத்திற்குள் கனேமுல்ல சஞ்சீவ சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து விசாரணை நடத்தி வரும் பொலிஸார், சட்டத்தரணி வேடத்தில் வந்து கொலை செய்த நபர் பற்றிய தகவல்களைக் கண்டுபிடித்துள்ளனர்.

குறித்த துப்பாக்கிச் சூடு நடத்தியவர், கடந்த மாதம் 7 ஆம் திகதி கல்கிஸ்ஸை, வட்டரப்பல பகுதியில் இரண்டு பேரை சுட்டுக் கொன்ற அதே துப்பாக்கிச் சூடு நடத்தியவர் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கனேமுல்ல சஞ்சீவ கொலையின் முக்கிய சந் தேக நபர் நேற்று பிற்பகல் புத்தளம் பாலவிய பகுதி யில் வைத்து பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டபோது அவரிடம் பல அடையாள அட்டைகள் இருந்ததாகவும், அதில் சட்டத்தரணியாக பணிபுரிவதைக் குறிக்க தயாரிக்கப்பட்ட சட்டத்தரணி அடையாள அட்டை ஒன்றும் உள்ளடங்கி இருந்ததாக சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பாக சிறப்பு செய்தியாளர் சந்திப்பை நடத்திய போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க இதனை தெரிவித்தார்.

அத்துடன் குறித்த சந்தேகநபர், முதலில் மொஹமட் அஸ்மன் ஷெரிப்தீன் என்ற பெயரில் தோன்றியதாகவும், பின்னர் சமிந்து தில்ஷான் பியுமாங்க கந்தனராச்சி என்ற பெயரைப் பயன்படுத்தியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

கொடிகாரகே கசுன் பிரபாத் நிஸ்ஸங்க என்ற பெயரைக் கொண்ட போலியான சட்டத்தரணி அடையாள அட்டையையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

கனேமுல்ல சஞ்சீவவை கொலை செய்த நபருக்கு உதவியாக சட்டத்தரணி போல வேடமணிந்து தேவகே இஷாரா செவ்வந்தி என்ற பெண்ணும் உறுதுணையாக இருந்துள்ளமை தெரிய வந்துள்ளது.



அத்துடன் கனேமுல்ல சஞ்சீவ கொலைச் சம்ப வத்தின் பிரதான சந்தேகநபர் தப்பிச் செல்ல உதவிய வேன் சாரதி இன்று கைது செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கனேமுல்ல சஞ்சீவவின் கொலை தொடர்பான மேலதிக விசாரணைகள் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினரால் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கனேமுல்ல சஞ்சீவவின் கொலையின் முக்கிய சந்தேக நபர், அடிப்படை பயிற்சியை முடித்துவிட்டு இராணுவத்திலிருந்து தப்பியோடியவர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## புதுக்கடை நீதிமன்றத் துப்பாக்கிச்சூடு:

# துப்பாக்கிதாரிக்கு உதவிய பெண்ணை கண்டுபிடிக்க பொலிஸ் விசேட நடவடிக்கை

கொழும்பு, பெப். 20

கொழும்பு, புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தில் கனேமுல்ல சஞ்சீவ சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் துப்பாக்கிச்சூடு நடத்திய பிரதான சந்தேகநபருக்கு உதவிய பெண் சந்தேகநபரை அடையாளம் காண பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

கடுவெல்லேகம பிரதேசத்தைச் சேர்ந்த பிங்புர தேவகே இசார செவ்வந்தி என்ற 25 வயதுடைய பெண்ணைக் கண்டுபிடித்துத் தருமாறு கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் பொதுமக்களின் உதவியைக் கோரியுள்ளனர்.

அதன்படி, தலைமறைவான பெண்ணை அடையாளம் கண்டால் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் - 0718591727 அல்லது கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி 0718591735 என்ற தொலைபேசி இலக்கங்களில் தகவல்களைத் தெரிவிக்கலாம்.

மேற்படி பெண் பற்றி தகவல்களை வழங்குபவர்களுக்குப் பொலிஸ் நன்கொடை நிதியத்தின் மூலம் சன்மானம் வழங்கப்படும் என்று பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

# செம்மணி மயான மனிதப் புதைகுழியை இன்று நேரில் பார்வையிட்ட யாழ். நீதிவான்

யாழ்ப்பாணம், செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானப் பகுதியில் மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்ட இடத்தை யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா இன்று மதியம் நேரில் சென்று பார்வையிட்டார்.







# முப்பது போதை மாத்திரைகளுடன் யாழ்ப்பாணத்தில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ்ப்பாணம், இலந்தைக்குளம் பகுதியில் போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி சந்தேகநபரிடமிருந்து 30 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகளின் பின்னர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தின் போதைப் பொருள் தடுப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# டெல்லியின் 4ஆவது பெண் முதலமைச்சராக ரேகா குப்தா!



டெல்லியின் 4ஆவது பெண் முதலமைச்சராக ரேகா குப்தா இன்று பிரதமர் நரேந்திர மோடி முன்னிலையில் பதவியேற்கவுள்ளார்.

டெல்லி மாநிலத்தில் சுஷ்மா சுவராஜ் (பா.ஜனதா), ஷீலா தீட்ஷித் (காங்கிரஸ்), அதிஷி (ஆம் ஆத்மி) ஆகியோரைத் தொடர்ந்து 4ஆவது பெண் முதலமைச்சராக தற்போது ரேகா குப்தா பதவி ஏற்கவுள்ளார்.

அந்தவகையில் டெல்லி ராம்லீலா மைதானத்தில் இன்று பகல் 12 மணிக்கு நடைபெறும் பிரமாண்ட விழாவில் ரேகா குப்தா தலைமையிலான பா.ஜனதா மந்திரி சபை பதவி ஏற்கவுள்ளது.

இப் பதவியேற்பு விழாவை முன்னிட்டு டெல்லியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். போக்கு வரத்தும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

இதனிடையே முதல் மந்திரியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ரேகா குப்தா தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருந்ததாவது:-

'என் மீது நம்பிக்கை வைத்ததற்காகவும், முதலமைச்சர் பொறுப்புக்கு என்னை தேர்ந்தெடுத்ததற்காகவும், அனைத்து தலைவர்களுக்கும் என்னுடைய மனப்பூர்வ நன்றியை நான் தெரிவித்து கொள்கிறேன். உங்களுடைய இந்த நம்பிக்கையும், ஆதரவும் எனக்கு புதிய சக்தியையும், உந்துதலையும் ஏற்படுத்தியுள்ளது. நான் முழு அளவில் நேர்மையாகவும், ஒருமைப்பாட்டுடனும் மற்றும் டெல்லியின் ஒவ்வொரு குடிமகனின் நலனுக்காக, அதிகாரம் பெறுவதற்காக மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சி பெறுவதற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றுவேன் என உறுதி கூறுகிறேன். டெல்லியை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்லும் முக்கிய வாய்ப்பில் நான் முழு அளவில் உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் செயல்படுவேன்'இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

70 தொகுதிகள் கொண்ட டெல்லி சட்டசபைக்கு கடந்த 5ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது. இதில் மொத்தம் சுமார் 61 சதவீத வாக்குகள் பதிவாகின. தேர்தலில் பா.ஜனதா வெற்றிபெறும் என தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகளில் பெரும்பாலானவை தெரிவித்தன. அதன்படி பா.ஜனதா 48 இடங்களிலும், ஆளும் கட்சியாக இருந்த ஆம் ஆத்மி 22 இடங்களிலும் வெற்றி பெற்றன. 27 ஆண்டுகளுக்குப் பிறகு டெல்லி தேர்தலில் பா.ஜனதா வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மகா கும்பமேளாவில் பெண்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## காக்க தவறிய பா.ஜ.க



உத்தரப் பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் மகா கும்பமேளா கடந்த ஜனவரி 13 ஆம் ஆரம்பமாகியது. எதிர்வரும் பெப்ரவரி 26 ஆம் திகதி, மகா சிவ ராத்திரியை ஒட்டி இந்த விழா முடிவுக்கு வரும். உ.பி. அரசாங்க புள்ளிவிவரங்களின்படி இதுவரை 50 கோடிக்கும் அதிகமான மக்கள் மகா கும்பமேளா திரிவேணி சங்கமத்தில் நீராடியுள்ளனர். ஒவ்வொரு நாளும் லட்சக்கணக்கான மக்கள் இந்த மாபெரும் விழாவில் பங்கேற்கின்றனர்.

இந்நிலையில் மகா கும்பமேளாவில் பெண்கள் குளித்து உடை மாற்றும் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் ஆன்லைனில் விற்கப்படும் அதிர்ச்சி உண்மை வெளிச்சத்துக்கு வந்துள்ளது. டெலிகிராம் உள்ளிட்ட சமூக ஊடகங்களில் இயங்கும் கும்பல்கள், இந்த வீடியோக்களை விற்பனை செய்து வருகிறது.

இந்த வீடியோக்களில் பல, பெண்கள் குளிக்கும் முழு வீடியோக்களையும் பார்க்க, பயனர்களை டெலிகிராம் லிங்க்-குக்கு இட்டுச் செல்கின்றன.

'மகா கும்ப கங்கை நீராடல்' போன்ற தலைப்புகளுடன் பெண்கள் குளிக்கும் வீடியோக்களை பகிர்ந்து பயனர்களை இந்த கும்பல்கள் கவர்ந்து வருகின்றன. இதில் #mahakumbh2025, #gangasnan, மற்றும் #prayagrajkumbh உள்ளிட்ட ஹேஷ்டேக் குகளை பயன்படுத்துகின்றனர்.

ஒரு பெண் தனது கீழ் முதுகு, பின்பகுதி வெளியே தெரியும் நிலையில் ஆற்றில் குளிக்கும் வீடியோ ஒன்று அதற்கு உதாரணம். தான் வீடியோ பதிவு செய்யப்படுவதை அறியாமல், அந்த பெண் தொடர்ந்து குளிக்கிறார். இந்த வீடியோ பகிரப்பட்ட சமூக வலைதள கணக்கை போல ஏராளமான கணக்குகளில் இதுபோன்ற ஏராளமான வீடியோக்கள் இடம்பெற்றுள்ளன.

இவற்றில் தற்போது மகா கும்பமேளாவில் எடுக்கப்பட்ட வீடியோக்களும், பழைய வீடியோக்களும் சேர்ந்தே உள்ளன. டெலிகிராமில் 'கங்கை நதி திறந்தவெளி குளியல் குழு', 'மறைக்கப்பட்ட குளியல் வீடியோக்கள் குழு' மற்றும் 'திறந்தவெளி குளியல் வீடியோக்கள் குழு' போன்ற சேனல்கள் செயல்படுவது கண்டறியப்பட்டுள்ளன. கடந்த பெப்ரவரி 12 முதல் பெப்ரவரி 18 வரை டெலிகிராம் அனலிடிக்ஸ் படி, 'திறந்தவெளி குளியல்' என்பதை அதிக பெயர்கள் தேடியுள்ளனர்.

இதில் காணப்படும் வீடியோக்கள் மற்றும் புகைப்படங்கள் பலவற்றில், பெண்கள் உடை மாற்றுவது, துண்டுகளுடன் நிற்பது உள்ளிட்ட காட்சிகள் இடம்பெற்றுள்ளன. இந்த சேனல்களில் இணைய இந்திய மதிப்பின்படி ரூ.1,999 முதல் ரூ.3,000 வரை கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

கும்பமேளாவுக்கு வரும் எல்லோருடைய கைகளிலும் மொபைல் இருக்கும். அத்தகைய சூழ்நிலையில், யார் யாருடைய புகைப்படம் எடுக்கிறார்கள், யாரை வீடியோ எடுக்கிறார்கள் என்பது யாருக்கும் தெரியாது. இதை சாதகமாக பயன்படுத்தி இத்தகைய கும்பல்கள் இயங்கி வருகின்றன.

இதுபோன்ற டெலிகிராம் சேனல்களில், பெண்கள் குளிக்கும் வீடியோக்கள் மற்றும் புகைப்படங்களைத் தவிர, மருத்துவர்கள், தாதியர்களால் பெண்கள் பரிசோதிக்கப்படும் சிசிடிவி காட்சிகள், அவர்களின் அந்தரங்க உறுப்புகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுவது உள்ளிட்ட வீடியோக்களும் வலம் வருகின்றன.

மகா கும்பமேளாவில் குளிக்கும் பெண்களின் புகைப்படங்கள், வீடியோக்கள் விற்பனை செய்யப்பட்டு வருவது கடும் அதிர்வலையை ஏற்படுத்தி வருகிறது.

இந்த விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் இதுகுறித்து சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவ் ஆளும் பாஜக அரசை கடுமையாக விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், மகா கும்பமேளாவில் பெண்களின் கௌரவத்தைப் பாதுகாக்க பாஜக அரசு தவறிவிட்டது. இது மிகவும் அநாகரீகமான மற்றும் உணர்ச்சிகரமான சர்ச்சைக்குரிய விஷயம். மகா கும்பமேளாவில் மோட்சம் பெற வந்த பெண் சக்தியின் படங்கள் வெளிப்படையாக விற்பனை செய்யப்பட்ட செய்தியால் பக்தர்கள் மத்தியில் பெரும் கோபம் ஏற்பட்டுள்ளது.

பெண்களின் கௌரவத்தைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமை. இந்த ஆன்லைன் விற்பனையிலிருந்து ஜிஎஸ்டி சம்பாதிப்பதன் மூலம் அரசாங்கம் இந்த சட்டவிரோத வியாபாரத்தில் பங்குதாரராக மாறவில்லையா?

உ.பி. மற்றும் தேசிய மகளிர் ஆணையம் இதை உடனடியாகக் கவனத்தில் கொண்டு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் இதில் தொடர்புடைய அனைத்து நபர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இது மிகவும் கண்டிக்கத்தக்கது என்று தெரிவித்துள்ளார்.

# 21 ஆண்டுகளாக நுரையீரலில் சிக்கிய பேனா மூடியுடன் வாழ்ந்த வாலிபர்

## வைத்தியர்கள் அதிர்ச்சி



தெலுங்கானா மாநிலம் கரீம் நகரை சேர்ந்த 26 வயது வாலிபர். இவருக்கு திடீரென இருமல் மற்றும் நுரையீரல் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் அவருடைய உடல்நிலை மோசமடைந்தது.

அவரை மாதப்பூரில் உள்ள கிம்ஸ் வைத்தியசாலையில் சேர்த்தனர். அங்கு வைத்தியர்கள் பரிசோதித்தபோது நுரையீரல் பகுதியில் கட்டி போன்று அமைப்பு இருந்தது கண்டறியப்பட்டது. இதனை தொடர்ந்து அறுவை சிகிச்சையின் மூலம் அதனை அகற்ற வைத்தியர்கள் முடிவு செய்தனர்.

அப்போது வாலிபரின் நுரையீரலில் சிக்கியிருந்தது பேனா மூடி என்பது தெரிய வந்தது. இதனை அகற்றிய வைத்தியர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

இதுகுறித்து வாலிபரின் குடும்பத்தினரிடம் கேட்டனர். அப்போது வாலிபர் 5 வயது குழந்தையாக இருந்தபோது தற்செயலாக ஒரு பேனா மூடியை விழுங்கி விட்டார்.

எந்த பாதிப்பும் இல்லாததால் நாங்கள் சிகிச்சை அளிக்கவில்லை என தெரிவித்தனர். 21 ஆண்டுகளாக நுரையீரலில் பேனா மூடியுடன் வாழ்ந்த வாலிபர் தற்போது நலமுடன் இருப்பதாக வைத்தியர்கள்த தெரிவித்தனர்.

# அமுதக் கரங்கள் திட்டம் இன்று முதல் ஆரம்பம்



தி.மு.க. தலைவரும்முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் எதிர்வரும் முதலாம் திகதி தனது 72ஆவது பிறந்தநாளை கொண்டாடுகிறார். அவரது பிறந்தநாளை கொண்டாட தி.மு.க. தொண்டர்கள், நிர்வாகிகள் என அனைவரும் தயாராகி வருகின்றனர்.

இந்த நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை கொளத்தூரில் 'அமுதக் கரங்கள்' திட்டத்தை துர்கா ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று முதல் அடுத்த ஆண்டு பெப்ரவரி 19ஆம் திகதி வரை 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 பேருக்கு வெவ்வேறு இடங்களில் காலை உணவு வழங்கும் 'அமுதக் கரங்கள்' திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

# பாலினம் தீர்மானிக்கும் வேலையும் கூலியும்!

சமையல் செய்பவர் என சொன்னவுடன் சட்டென அனைவரின் மனதுக்கும் வருவது ஒரு பெண் அடுப்படியில் சமையல் செய்யும் உருவம்தான். ஏதாவது வீடுகளில் ஆண்கள் சமையல் செய்கிறார்கள் எனச் சொன்னால், ஏதோ செய்யக்கூடாத வேலையை ஒரு ஆண் செய்துவிட்டதுபோல, பொது சமூகத்தால் பார்க்கப்படுகிறது.

உணவு உண்ணும் ஒவ்வொருவருக்கும் சமைக்கத் தெரிந்திருக்க வேண்டும் என்பது அடிப்படை. ஆனால், இச்சமூகம் அதை பெண்களின் வேலையாக மட்டுமே பார்க்கிறது. இந்தச் சிந்தனையும் பெண்களுக்கு பொருளாதார பலனை அளிக்காத வீட்டு அடுப்படிவரைதான் கடைபிடிக்கப்படுகிறது, அதே சமையலைத் தொழிலாகச் செய்து பொருளாதாரம் ஈட்டும் துறையில், 80% – 90% பேர் ஆண்கள்தான். அத்துறையில் பணிபுரியும் சொற்ப எண்ணிக்கையிலான பெண்களும்கூட அவர்களது ஆண் சகாக்களைவிட கிட்டத்தட்ட 22% குறைவாகவே சம்பாதிக்கிறார்கள் என ஆய்வுகள் சொல்கின்றன.

அதே போல, அழகு சாதனப் பொருள்கள் எனச் சொல்லும்போது அவை பெண்களை மையப்படுத்திதான் விளம்பரப்படுத்தப்படுகின்றன. முற்றும் முழுதாக பெண்களுடன் இணைத்துத்தான் பார்க்கப்படுகின்றன. அழகு சாதனப் பொருள்கள் செய்யும் துறையில் 69% பெண்கள் வேலை செய்தாலும், வெறும் 36% பெண்கள் மட்டும்தான் உயர்மட்ட பதவிகளை வகிக்கிறார்கள், இவர்களும் தங்கள் சக ஆண் ஊழியர்களைவிட 20% குறைவாகவே ஊதியம் வாங்குகின்றனர்.

இந்த நிலை சமையல் துறையிலும் அழகு சாதனப் பொருள்கள் செய்யும் துறையிலும் மட்டுமல்ல, ஆடை வடிவமைப்புத் துறையிலும் (fashion designing) காணப்படுகிறது. இத்துறையில் கடைமட்ட ஊழியர்களாக 60% பெண்கள் உள்ளனர், ஆனால் முன்னணி ஆடை வடிவமைப்பு நிறுவனங்களில் 25% க்கும் குறைவான பெண்கள்தான் தலைமைப் பதவிகளை வகிக்கின்றனர். ஆடை வடிவமைப்புத் தொழிலில் தலைமை நிர்வாக அதிகாரிகளில் 12.5% மட்டுமே பெண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்களின் வருமானமும் அத்துறையில் பணிபுரியும் ஆண் ஊழியர்களைவிட 25% குறைவாகத்தான் உள்ளது.

ஆசிரியர்கள் என்றால் அது பெண்கள்தான் என்பதான பிம்பம் உள்ளது. வெளிப்படையாகப் பார்த்தால் இது உண்மை எனக்கூடத் தோன்றும். ஆனால் உள்ளார்ந்து ஆராய்ந்தால், இது மேம்போக்கான கருத்து என்பது புரியும். உலக அளவில் பாலர் பள்ளி (pre-primary) நிலையில் 94% பெண்கள் ஆசிரியர்களாக வேலை செய்கின்றனர், தொடக்கப்பள்ளி நிலையில் 68% பெண்களும். கீழ் இடைநிலைக் கல்வி (lower secondary) நிலையில் 58% பெண்களும், மேல்நிலைப் பிரிவில் 52% பெண்களும் ஆசிரியர்களாக வேலை செய்கின்றனர். உயர் நிலைக் கல்வியில் ஆசிரியராக வேலை செய்யும் பெண்கள் 43% – ஆக உள்ளனர்.

இங்கு கல்விப்படிநிலை உயரும்போது அதில் ஆசிரியராக வேலை செய்யும் பெண்களின் எண்ணிக்கை குறைவதை, நம்மால் பார்க்க முடியும். அதுமட்டுமல்லாமல் இந்தத் துறையிலும் பெண்களுக்கான ஊதியம் ஆண்களைவிட 28% குறைவாகத்தான் கொடுக்கப்படுகிறது.

பொதுச் சமூகத்தால் பெண்களைச் சுற்றிக் கட்டமைக்கப்பட்டுள்ள துறைகளிலும், பெண்களுக்கு உகந்தது என கருதப்படும் துறைகளிலும் கூட பெண்களின் பங்களிப்பு மிகக் குறைவாகவே உள்ளது. அப்படியே அவர்களின் பங்களிப்பு ஒரு துறையில் இருந்தாலும், உயர்மட்ட பதவிகளில் பெண்கள் பங்கு வகிப்பது குறைவாகத்தான் இருக்கிறது. அதையும் மீறி சில பெண்கள் உயர்மட்ட பதவிகளுக்கு வந்தாலும், அவர்களின் சக ஆண் ஊழியர்களைவிட குறைவான ஊதியமே பெறுகிறார்கள் என்பதை மேலே குறிப்பிட்டுள்ள சில எடுத்துக்காட்டுகளை வைத்து நம்மால் புரிந்து கொள்ள முடியும்.




ஒரு வேலை வெறும் கடமையாக இருக்கும்போதும், குறைவான பொருளீட்டும் வேலையாக இருக்கும்போதும் அது பெண்களுக்காக ஒதுக்கப்படுகிறது. அதே வேலை அதிக பொருளீட்டும் வேலையாகவோ, அதிக அதிகாரம் மற்றும் சமூக அந்தஸ்து பெரும் வேலையாகவோ மாறும்போது, அது ஆண்களுக்கான வேலையாக மாறுகிறது.

சில வேலைகளை ஆண்கள் கையில் எடுக்கும்போது, ஆண்களுக்கு அதில் அதிகப்படியான ஊதியம் வழங்கப்படுவதும் நடைமுறையில் உள்ளது. ஒரு வேலையை, ஆண்களும் பெண்களும் ஒரே கல்வித் தகுதியுடன் ஒரே போலச் செய்தாலும்கூட, இத்தகைய ஏற்றத் தாழ்வுகள் ஊதியத்துடன் நிற்பதில்லை. பெண்கள் செய்யும் வேலைக்கான அங்கீகாரத்தைக் கொடுக்கும் இடம்வரையும் இந்த பாரபட்சம் நீளுகிறது.

ஆண்களைவிட பெண்களுக்குக் குறைந்த ஊதியம் கொடுக்கப் படுவதற்கான காரணங்கள் பல உள்ளன. அவற்றில் மிக முக்கியமான ஒன்று பிள்ளைப்பேறு. ஒரு பெண் பிரசவத்துக்குப் பிறகு தன்னுடைய வேலையைத் தொடர நினைத்து, வேலைக்குத் திரும்பும்போது, அவளுக்கு ஊதியம் குறைவாகவே கொடுக்கப்படுகிறது. உலகளவில், பிள்ளை பெற்றபின் வேலைக்குத் திரும்பும் பெண்களின் ஊதியம் 43% குறைகிறது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

செய்யும் வேலை, அந்த வேலையை செய்யும் இடம், அந்த வேலைக்கான ஊதியம் மற்றும் அங்கீகாரம் என அனைத்திலும் ஆண், பெண் பாகுபாடு பார்க்கப் படுவதற்கான காரணம், பொதுவாக ஒரு பெண் செய்யும் வேலை என்பது அவளது கடமையாகவே கருதப்படுகிறது. அவள் அதற்கான ஊதியத்தை, அங்கீகாரத்தைக் கேட்கும்போது, அவள் இந்த சமூகத்தால் எதிர்மறையான விமர்சனத்துக்கு உள்ளாக்கப்படுகிறாள். எந்த வேலையாக இருந்தாலும் ஆண் பெண் பாகுபாடு பார்த்து இந்த வேலையை இவர்தான் செய்ய வேண்டும், பெண்கள் செய்யும் வேலைக்கு இந்த ஊதியம் கொடுத்தால்போதும் எனும் முன் முடிவுடன் அணுகுவது, இத்தகைய பாகுபாடு நிறைந்த வேலைச் சூழலை நிலைநிறுத்துகிறது.

இத்தனை பாகுபாடுகள் உள்ளன என்பதைப் பெண்கள் அறிந்திருந்தாலும்கூட, அவர்கள் தங்களது ஊதியத்தையோ அங்கீகாரத்தையோ கேட்டுப் பெறுவதில் சற்றுத் தயக்கம் காட்டுகிறார்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மை. காரணம், இந்தச் சமூகத்தால், தான் எதிர்மறையாக விமர்சிக்கப்படுவோமோ எனும் பாதுகாப்பற்ற மனநிலை. அது மட்டுமல்லாமல், சிறுவயதிலிருந்து ஒரு பெண் தன் உரிமையை கேட்டுப் பெற பழக்கப்படுத்தப் படுவதில்லை. மாறாக அவள் வாயை திறந்து எதுவும் கேட்கக் கூடாது எனும் சிந்தனை நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒவ்வொரு இடத்திலும் சொல்லப்பட்டு, பசுமரத்தாணி போல அவளது ஆழ் மனதில் பதிய வைக்கப்படுகிறது. இத்தனையையும் மீறி அவள் கேள்வி கேட்டால், இந்தச் சமூகத்தால் புறக்கணிக்கப்படுகிறாள்.

இங்கு இத்தனையையும்தாண்டியார்புறக்கணித்தாலும் தங்கள் உரிமையை கேட்டுப் பெற்றே ஆகவேண்டும் என நினைக்கும் பெண்கள் எண்ணிக்கையில் குறைவு. ஆனால், சமீபகாலங்களில் இந்த எண்ணிக்கை அதிகரித்து வருவது சற்று நம்பிக்கையளிப்பதாக உள்ளது. சொந்த வாழ்க்கையையும் தங்கள் வேலையையும் குழப்பிக் கொள்ளாமல், தனக்கும் தன் எதிர்காலத்திற்கும் எது தேவை, தங்களது விடுதலையைக் காக்க பெருளாதார வலிமை எவ்வளவு தேவையானது என உணர்ந்து, பெண்கள் தெளிவாக முடிவெடுக்க ஆரம்பிக்கும்போது, இந்த எண்ணிக்கை குறிப்பிடும்படியான அளவு உயரும் என்பதில் ஐயமில்லை.

வரலாறு நெடுக இருந்த அடிமைத்தனங்களையும் தடைகளையும் உடைத்து பெண்கள் மேலெழும்பி வந்துள்ளனர். அதேபோல இந்த வேலை மற்றும் பொருளாதாரம் சார்ந்த பாரபட்சத்தையும் உடைத்துப் பெண்கள் மேலெழும்புவார்கள். ஆனால் ஒரு சமூகமாக பெண்களைச் சார்ந்தும் பெண்களின் வேலை சார்ந்தும் இச்சமூகம் இந்த மெத்தனப் போக்கைக் கடைபிடிப்பதன் முக்கிய காரணம், பெண்கள் வேலைக்கு செல்வதென்பது அத்தியாவசியமானது எனும் எண்ணம் நம் சமூகத்தில் பெருமளவு ஏற்படாமல் இருப்பதும், ஒரு பெண் வேலைக்கு சென்றாலும் அவளின் ஊதியம் ஓர் உபரி வருமானம் என பாவித்து, அவளது வருமானத்துக்கான அங்கீகாரம் மறுக்கப்படுவதுமாகும்.

இந்த நிலை மாறவேண்டுமெனில், பெண்கள் வேலைக்குச் செல்வது பெண்களின் சுயமரியாதை சார்ந்த விஷயமாகவும், அவர்களின் பொருளாதார விடுதலை சார்ந்த விஷயமாகவும் பார்க்கப்பட வேண்டும். தங்கள் வேலைக்கு ஏற்ற ஊதியத்தையும் அங்கீகாரத்தையும் கேட்டுப்பெறுவது தங்கள் உரிமை எனும் எண்ணம் பெண்களின் மனதில் ஏற்பட வேண்டும். பெண்கள் எந்த விதத்திலும் யாரை விடவும் குறைந்தவர்கள் அல்லர் எனும் சுயமதிப்பீடு பெண்கள் மனதில் ஆழப் பதியவேண்டும்.




ஒருவரின் பாலினம் சார்ந்து ஒருவரது கல்வியையும் வேலையையும் பொருளாதார பலனையும் அவர்களுக்கான அங்கீகாரத்தையும் நிர்ணயிப்பது பிற்போக்குத்தனம் எனும் சிந்தனை நம் சமூகத்தில் ஏற்பட வேண்டும். ஆனால் அதுவரை நாம் மௌனம் காக்காமல், நமக்கான உரிமை பெற நாம் நம்முடைய குரலை உயர்த்த வேண்டும்.

தங்கள் உரிமையை யாரும் பிச்சையாகப் போடமாட்டார்கள் எனும் விழிப்புணர்வும், யாருடைய சமுதாய அங்கீகாரத்துக்குள்ளும் தங்களுடைய சுயமதிப்பீடு அடங்காது எனும் தெளிவும், ஒவ்வொரு பெண் மனதிலும் பிறந்துவிட்டால், வேலையிடங்களில் பெண்களுக்கு காட்டப்படும் ஊதியம் மற்றும் அங்கீகாரம் சார்ந்த பாகுபாடுகள் குறையும். அல்லது குறைந்தே ஆக வேண்டும் எனும் நிலை உருவாகும் என்பது நிச்சயம்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.02.2025 இல் வெளியிடப்பெற்றது.